FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348049

1. District : Dharmapuri PS: VSNE Year: 2026 FIR No.: 3/AC/2026 Date: 04.07.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention Of Corruption Act, 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 03.07.2026 at 14.00 Hrs

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.07.2026 நேரம் 23.45 Hrs

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 15H-9925973 நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Suo Moto
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் O/o the Dharmapuri Municipality, Dharmapuri about 1½ km South-east

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. NAGARAJAN (b) Father's/ Husband's Name : Tr. T.A. Manappan
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 15/1976 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Deputy Superintendent of Police தொழில் (g) Address : O/o the Deputy Superintendent of Police Vigilance and Anti-Corruption, Dharmapuri.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. M. Vadivel, age 48/2026, S/o. Manappagounder, Chairman, O/o the Dharmapuri Municipality, Dharmapuri.
2) Tr. S. Nagaraj, age 30, S/o. Sekar, Junior Assistant / Cashier, O/o the Dharmapuri Municipality, Dharmapuri.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

-

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

-

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet is enclosed herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

SUO MOTO

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 06/07/26

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

06.07.2026 at 13.00 hrs

Name: பெயர் M. NAGARAJAN,
Rank: நிலை Deputy Superintendent of Police No. எண்
Vigilance and Anti. Corruption,
Dharmapuri.

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/AC/2026, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12–ன் தொடர்ச்சி.

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் M.நாகராஜன் ஆகிய நான் 03.07.2026-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 16.00 மணிமுதல் இரவு 23.45 மணிவரையில் தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் 04.07.2026-ம் தேதி காலை 11.00 மணிக்கு, தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் பிரிவு கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/AC/2026, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 –ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் விபரம் பின்வருமாறு.

03.07.2026-ம் தேதியன்று மதியம் சுமார் 14.00 மணிக்கு, தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் கட்டிட வரைபட அனுமதி, சுகாதாரப் பொருட்கள், மின்சாதனப் பொருட்கள், சொத்துவரி வசூல், வாடகை கட்டணம் வசூல், ஒப்பந்த பணிகளுக்கான நிதிவிடுவித்தல், குடிநீர்வரி, வீட்டுவரி கட்டணங்கள் வசூலிப்பதில் முறைகேடுகள் மற்றும் ஒப்பந்தாரர்களிடமிருந்து கையூட்டு பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின்பேரில், 03.07.2026- ம் தேதி 15.45 மணிக்கு நான், அரசு சாட்சிகள் திரு.C.காமராசன், மண்டல துணை வட்டாட்சியர், பாலக்கோடு, தருமபுரி மாவட்டம் மற்றும் திரு.P.கார்த்திக், உதவியாளர், உதவி ஆணையாளர் அலுவலகம், இந்து சமய அறநிலைத்துறை, தருமபுரி மற்றும் காவலர் குழுவினருடன் தருமபுரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து அரசு வாகனங்களில் புறப்பட்டு, தருமபுரி நகராட்சி அலுவலகத்திற்கு 16.00 மணிக்கு அவ்வலுவலகத்தை திடீர் சோதனை செய்ய சென்றோம். அவ்லுவலகத்திற்கு உள்ளே நுழைந்தபோது அந்த அலுவலகத்தின் வராண்டாவில் தனிநபர்களும், அலுவலகத்தினுள் அலுவலர்கள் சிலரும் இருந்தனர். அப்போது அந்த அலுவலகத்தின் நிர்வாக அலுவலர் அறையில் துப்புரவு அலுவலர் திரு.S.ராஜரத்தினம் அவர்கள் அமர்ந்திருந்தார். அவரிடம் என்னையும், அரசு சாட்சிகள் மற்றும் காவலர்களையும்

அறிமுகம் செய்துக் கொண்டு திடீர் சோதனை மேற்கொள்ள வந்த விபரத்தை தெரிவித்து, தருமபுரி நகராட்சி ஆணையாளர் குறித்து அவரிடம் விசாரித்தபோது, தருமபுரி நகராட்சி ஆணையாளர் பதவி காலியாக இருப்பதால், தருமபுரி நகராட்சி ஆணையாளர் பொறுப்பை கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளர் திரு.R.சேகர் அவர்கள் கூடுதலாக கவனித்து வருகிறார் என்றும், அவர் தற்போது சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கலந்தாய்வு கூட்டத்திற்கு சென்றுள்ளதாகவும், நகராட்சி ஆணையாளர் ஆஜரில் இல்லாத நிலையில் தற்போது தான்தான் அலுவலக பொறுப்பை கவனித்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர் நான் துப்புரவு அலுவலர் திரு.S.ராஜரத்தினம் அவர்களிடம் தெரிவித்து, அந்த அலுவலகத்தில் அப்போது பணியில் இருந்த அனைத்து பணியாளர்களையும் அலுவலக தரைத்தளத்தின் பிரதான ஹாலுக்கு வரவழைக்கப்பட்டது. பின்னர் அவ்வலுவலகத்தில் இருந்த 14 அலுவலர்கள் மற்றும் 2 தனிநபர்கள் ஆகியோர்களை அரசு சாட்சிகள், துப்புரவு அலுவலர் திரு.S.ராஜரத்தினம் ஆகியோர் முன்னிலையில் காவல் குழுவினர் மற்றும் பெண் தலைமை காவலர் திருமதி.ஜமுனா ஆகியோர் உதவியுடன் சோதனை செய்து, அவரவர் வைத்திருக்கும் பணத்தை எடுத்து ஆஜர் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்படி அவர்களும் அவர்கள் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தனர். அதில் 12 அலுவலர்கள் மற்றும் 2 தனிநபர்கள் ஆஜர் செய்த பணம் குறித்து அவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் அளித்த விளக்கங்கள் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் ஆதாரத்துடனும், நம்பத்தகுந்தவாறும் இருந்ததால் அவர்களின் பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அந்த அலுவலகத்தில் சங்கிலியாளராக பணிபுரியும் திரு.M.வடிவேல் அவரது சட்டையின் இடதுப்புற மேல்பாக்கெட்டில் இருந்து ரூ.70/–ம் மற்றும் அவரது பேன்ட்டின் வலதுப்புற பாக்கெட்டில் இருந்து ரூ.43,000/–மும் எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது ரூ.70/– தனது சொந்த பணம் என்றும், ரூ.43,000/–ம் சொத்துவரி வசூலித்த பணம் என்றும் விளக்கம் அளித்தார். ரூ.70/–க்கான விளக்கம் ஏற்றுக் கொள்ள தக்க வகையில் இருந்ததால், அந்த பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. திரு.M.வடிவேல்

சங்கிலியாளர் பணி செய்து வருவதாலும், அவருக்கு சொத்துவரி வசூல் செய்ய அலுவலகத்தின் மூலம் உத்தரவோ, முறையாக பணி ஒதுக்கீடோ செய்யாத நிலையில், அவரது விளக்கம் ஏற்புடையதாக இல்லை. மேலும் அவர் வரிகட்டணங்கள் வசூலிப்பதில் முறைகேடுகள் செய்து பொதுமக்களிடம் கையூட்டாக பெற்றிருக்க கூடும் என்பதற்கு நம்பதகுந்த முகாந்திரம் இருந்த காரணத்தால் ரூ.43,000/–ஐ அரசு சாட்சிகள் முன்னிலையில் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர் அந்த அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.S.நாகராஜ் அவரது சட்டையின் இடதுப்புற மேல்பாக்கெட்டில் இருந்து ரூ.940/–ம் மற்றும் அவரது பேன்ட்டின் வலதுப்புற பாக்கெட்டில் இருந்து ரூ.8,000/–மும் எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது ரூ.940/– தனது சொந்த பணம் என்றும், ரூ.8,000/–ம் சொத்துவரி வசூலித்த பணம் என்றும் விளக்கம் அளித்தார். ரூ.940/–க்கான விளக்கம் ஏற்றுக் கொள்ள தக்க வகையில் இருந்ததால் அந்த பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. திரு.S.நாகராஜ், இளநிலை உதவியாளர் நிலையில் காசாளர் பணி செய்து வருவதாலும், அவருக்கு சொத்துவரி வசூல் செய்ய அலுவலகத்தின் மூலம் உத்தரவோ, முறையாக பணி ஒதுக்கீடோ செய்யாத நிலையில், அவரது விளக்கம் ஏற்புடையதாக இல்லை. மேலும் அவர் பொதுமக்களிடம் வரிகட்டணங்கள் வசூலிப்பதில் முறைகேடுகள் செய்து கையூட்டாக பெற்றிருக்க கூடும் என்பதற்கு நம்பதகுந்த முகாந்திரம் இருந்த காரணத்தால் ரூ.8,000/– ஐ அரசு சாட்சிகள் முன்னிலையில் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. இது குறித்து பாலக்கோடு மண்டல துணை வட்டாட்சியர் திரு.C.காமராசன் அவர்களால், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. பின்னர் நான், அரசு சாட்சிகள் மற்றும் துப்புரவு அலுவலர் திரு.S.ராஜரத்தினம் முன்னிலையில் அந்த அலுவலகத்தின் தரைத்தளத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு அலுவலர்களின் கேபின்களையும் காவல் ஆய்வாளர் மற்றும் காவலர்கள் உதவியுடன் சோதனையிடப்பட்டது. அந்த சோதனையின்போது பணமோ, சந்தேகத்திற்குரிய பொருட்களோ கண்டறியப்படவில்லை. பின்னர் அந்த அலுவலகத்தின் முதல் மற்றும் இரண்டாம் தளங்களில் அமைந்துள்ள ஒவ்வொரு அலுவலர்களின் அறையையும் காவல்

ஆய்வாளர் மற்றும் காவலர்கள் உதவியுடன் சோதனையிடப்பட்டது. அந்த சோதனையின்போது பணமோ, சந்தேகத்திற்குரிய பொருட்களோ கண்டறியப்படவில்லை. பின்னர் நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களின் விவரங்களையும், அன்றைய தினம் அரசு கணக்கில் வசூல் இனங்கள் குறித்தும் அரசு சாட்சிகள் முன்னிலையில் சரிபார்க்கப்பட்டது. மேலும் அந்த அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பணியாளர்களின் வருகைப்பதிவேடு, பகிர்மான பதிவேடு, டெண்டர் பதிவேடு, டெக்னிகல் பதிவேடு, Revenue Fund Chitta Register, பிறப்பு இறப்பு பதிவேடு மற்றும் Vacant Land Tax Register ஆகிய பதிவேடுகளை பார்வையிட்டு, பார்வையிட்டதற்கு அடையாளமாக அந்த பதிவேடுகளில் பயன்பாட்டில் இருந்த கடைசி பக்கங்களில் நானும், அரசு சாட்சிகளும் சுருக்கொப்பம் செய்தோம். அப்போது ஏற்கனவே தகவல் தெரிவிக்கப்பட்டிருந்ததின் பேரில் தருமபுரி நகராட்சி ஆணையாளர் திரு.R.சேகர் கலந்தாய்வுக்கூட்டம் முடிந்து சேலத்தில் இருந்து தருமபுரி நகராட்சி அலுவலகத்திற்கு இரவு 09.45 மணிக்கு வந்து திடீர் சோதனையில் இருந்த என்னிடம் அறிமுகம் செய்துக் கொண்டார். நான் அவருக்கு திடீர் சோதனையின் முழுவிவரத்தை தெரிவித்து, என்னையும், அரசு சாட்சிகள் மற்றும் காவல் குழுவினரை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் மேற்சொன்ன பதிவேடுகளின் தொடர்புடைய பக்கங்கள் ஒளி நகல்கள் எடுக்கப்பட்டு தருமபுரி நகராட்சி ஆணையாளர் திரு.R.சேகர் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு வழக்கின் விசாரணைக்காக மகஜரில் என்னால் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின் முடிவில் தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் சங்கிலியாளராக பணிபுரியும் திரு.M.வடிவேல் மற்றும் இளநிலை உதவியாளர்/காசாளராக பணிபுரியும் திரு.S.நாகராஜ் ஆகியோர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் குறித்து அவர்களிடம் கேட்டபோது, அவர்களால் திருப்திகரமான விளக்கம் தர இயலவில்லை. மேற்படி திடீர் சோதனையின் செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் ஆவணங்களை பரிசீலித்ததில் இருந்து, ஏற்கனவே எனக்கு கிடைத்த தகவல்படி, கைப்பற்றப்பட்ட பணமானது பொதுமக்களிடமிருந்து குடிநீர்வரி, சொத்துவரி, வாடகை மற்றும் வாடகை புதுப்பித்தல் கட்டணம் வசூலிப்பதில் முறைகேடுகள் செய்தும், மேலும் எதிரிகள் தங்களின் பதவியை துஷ்பிரயோகம் செய்தும், பொதுமக்கள் மற்றும்

ஒப்பந்ததாரர்களிடமிருந்து கையூட்டாக பெற்றிருக்கக்கூடும் என்பதற்கான போதுமான முகாந்திரம் இருப்பதாக அறியப்பட்டதால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குர் அலுவலக உத்தரவுப்படி எதிரிகள் 1) திரு.M.வடிவேல், வயது 48/2026, த/பெ.மாரியப்பகவுண்டர், சங்கிலியாளர், நகராட்சி அலுவலகம், தருமபுரி மற்றும் 2) திரு.S.நாகராஜ், வயது 30, த/பெ.சேகர், இளநிலை உதவியாளர் / காசாளர், நகராட்சி அலுவலகம், தருமபுரி ஆகியோர்கள் மீது தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/AC/2026, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் திடீர் சோதனையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளின் அசல் மற்றும் எதிரிகளின் வாக்குமூலங்கள் அசல் ஆகியவற்றை மாண்புமிகு தருமபுரி மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் மேல் நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்பட்டது.

(M.நாகராஜன்)
காவல் துணை கண்காணிப்பாளர், 04/07/26
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
தருமபுரி.